30th March 1966]

எடுத்துக்கொள்ளும்போது, அந்த நிலங்களில் சாகுபடி இருந்தால் அந்த மகசூலை எடுத்த பின்னால், ரூல்ஸ் படி கொடுக்க வேண்டிய நபருக்கு கொடுக்கப்படும் வரையிலும் டெம்பரரியாக லீஸ்-க்கு விட வேண்டும். அந்தக் கட்டத்தில் தான் இப்போது இருக்கிறது.

* 521 கேள்வி.—திரு. எம். எஸ். மணி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கம் மேற்கொண்டுள்ள நில சீர்திருத்தச் சட்டத்தில் பழத் தோட்டம், காய்கறி தோட்டம், கோழி, ஆடு, மாடு, வளர்ப்பு பண்ணை நிலங்களுக்கு விதிவிலக்கு அளித்ததால் விளை நிலங்கள் மேற்படி நிலங்களாக பல பகுதிகளில் மாற்றப்பட்டு வருவது அரசாங்கத்திற்கு தெரியுமா?

(இ) ஆம் என்றால் அது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

கனம் திரு. வெ. ராமையா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. மாதவன்: இந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்தை நிர்வகிக்கக்கூடிய நிர்வாகத்திற்கு 36 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு வருவது உண்மையா? இவ்வளவு செலவு செய்தும், இந்த இலாகாவினால் போதிய அளவு பலன் இல்லை என்று சர்க்காருக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா: இந்தக் கேள்வியிலிருந்து கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கின்ற உபகேள்வி எழவில்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

உணவு தானியங்களின் விலை

* 522 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கொள்முதல் செய்யும் தானியங்களின் விலையில் ஒரு பகுதி ஈரம், பதர் ஆகியவற்றிற்காக கழித்துக் கொடுக்கப்படுகிறதா?

(இ) கழிவு எந்த அடிப்படையில்?

THE HON. SRI V. RAMAIAH: (a) Yes.

(b) For fair average quality paddy, certain specifications have been prescribed in the Annexure to Schedule I to the Madras Paddy (Maximum Prices) Order, 1964. For the paddy below